TAMIL

# NHS எவ்வாறு செயல்படுகிறது: புலம்பெயர்ந்த மக்களுக்கான வழிகாட்டி

இலவச உடல்நல தகவல் மற்றும் ஆலோசனையைப் பெற, NHS இலவச தொலைபேசி எண் 111ஐ டயல் செய்வதன் மூலம், அவர்களது 24 மணிநேர சேவையை தொடர்பு கொள்ளலாம். "interpreter please" (மொழிபெயர்ப்பாளர் தேவை)" என்று கூறி உங்கள் மொழியில் மொழிபெயர்ப்பாளரைக் கேட்கலாம்.

Bevan

*Inclusive Health and Wellbeing*

## மருந்தகம் → அடிப்படை மருந்துகள்

இருமல், சளி, தொண்டைக்கட்டு, வயிறு பிரச்சனை மற்றும் நோவு மற்றும் வலிகள் போன்ற சிறிய நோய்களுக்கான மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்துகளை மருந்தாளர்களால் வழங்க முடியும். நீங்கள் மருத்துவரிடம் செல்ல வேண்டும் அல்லது தேவையான உதவியை நீங்கள் உறுதியாக பெற மற்ற உடல்நல நிபுணர்களை அணுக தேவை எனறால், அதற்கு மருந்தாளரே வழிகாட்டுவார். நீங்கள் சிறிய நோய்களுக்கான மருந்துகளையும் முதலுதவி பொருட்களையும் மருந்தகம் அல்லது சூப்பர்மார்க்கெட்டில் வாங்கலாம்; அருகிலுள்ள மருந்தகத்தை கண்டுபிடிக்க பார்க்கவும்: www.nhs.uk/service-search/pharmacy/find-a-pharmacy

## பல் மருத்துவர்கள் மற்றும் கண்ணாடி கடைக்காரர்கள் → பற்கள் மற்றும் கண் பராமரிப்பு

- ஒரு பல் மருத்துவரை கண்டுபிடிக்கவும் www.nhs.uk/service-search/find-a-dentist
- ஒரு கண்ணாடி கடைக்காரரை கண்டுபிடிக்கவும் www.nhs.uk/using-the-nhs/nhs-services/opticians/

உங்கள் பல் வலி இருந்தால், அவசர பல் பராமரிப்பு சேவைகளை பெற 111 ஐ அழைக்க வேண்டும்

## பொது மருத்துவர் (GP) பிராக்டிஸ் அல்லது மருத்துவ மையம் → மருத்துவ மேலாண்மை, நீண்ட கால பராமரிப்பு மற்றும் மருத்துவமனை நிபுணர்களுக்கான அணுகலின் ஒருங்கிணைவு

ஒரு பொது மருத்துவர் மருத்துவ ஆலோசனையை வழங்கி, நோய கண்டறிதலைச் செய்து மற்றும் மருந்துகளை பரிந்துரைக்கலாம். பல உடல் மற்றும் மனநல பிரச்சினைகளுக்கு இவர்கள் உங்கள் முதல் தொடர்புப் புள்ளியாக இருக்கலாம். உங்கள் நீண்ட கால உடல்நலப் பராமரிப்பை ஒருங்கிணைத்து நிர்வகிப்பதும் பொது மருத்துவர் பிராக்டிஸின் பொறுப்பே, மேலும் உங்களுக்கு சிறப்பு மருத்துவமனை சேவைகள் தேவைப்பட்டால் அதை அவர்கள் பரிந்துரைக்கலாம். உங்கள் தற்போதைய உடல்நலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பொது மருத்துவர் பிராக்டிஸில் பதிவு செய்வதே சிறந்தது. www.nhs.uk/nhs-services/gps/how-to-register-with-a-gp-surgery/

## சமூக உடல்நல சேவைகள் → கர்ப்பம், குழந்தை ஆரோக்கியம், கருத்தடை சேவைகள்

மருத்துவமனைகளுக்கு செல்லாமல், சில உடல்நல சேவைகள் சமூகத்திலேயே அணுகப்படுகின்றன. மனநலம், குழந்தை ஆரோக்கியம் மற்றும் கர்ப்பகால பராமரிப்பு சேவைகள் மற்றும் பாலியல் ஆரோக்கியம் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு கிளினிக்குகள் ஆகியவை இதில் அடங்கும்.

## வாக்-இன் (உடனடி) அல்லது அவசர சிகிச்சை மையங்கள் → சிறு காயங்கள் அல்லது அவசர மருத்துவ ஆலோசனை

வெட்டுக்கள், சுளுக்குகள் மற்றும் சிறிய எலும்பு முறிவுகள் போன்ற சிறிய காயங்களுக்கு உங்களுக்கு அவசர மருத்துவ பராமரிப்பு அல்லது அவசர மருத்துவ ஆலோசனை தேவைப்பட்டால், சந்திப்பை முன்பதிவு செய்யாமலேயே நீங்கள் நேரடியாக வாக்-இன் (உடனடி) அல்லது அவசர சிகிச்சை மையத்திற்குச் செல்லலாம். இந்த மையங்கள் பொதுவாக பகல் நேரங்களில் திறந்திருக்கும்.

## நெருக்கடிநிலை சேவைகள் → மருத்துவ நெருக்கடிநிலை அல்லது உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை

யாராவது கடுமையாக நோய்வாய்ப்பட்டு அல்லது காயமடைந்தால் மற்றும் அவர்களின் உயிர் ஆபத்தில் இருந்தால் 999ஐ அழைக்கவும். தொலைபேசி ஆபரேட்டர் என்ன செய்ய வேண்டும் அல்லது அடுத்து எங்கு செல்ல வேண்டும் என்பதை பற்றி உங்களுக்கு ஆலோசனை வழங்குவார். சிகிச்சை அளிக்க அல்லது நோயாளியை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் அனுப்பப்படலாம். மருத்துவமனை விபத்து மற்றும் நெருக்கடிநிலை (A&E) பிரிவுகள் ஆண்டின் ஒவ்வொரு நாளும் 24 மணிநேரமும் திறந்திருக்கும். இந்தச் சேவைகளை நீங்கள் சந்திப்பை முன்பதிவு செய்யாமல் நேரடியாக சென்று அணுகலாம் www.nhs.uk/nhs-services/urgent-and-emergency-care-services/when-to-call-999/

## நெருக்கடிநிலை மனநலம் → தற்கொலை எண்ணங்கள் அல்லது தன்னையே கடுமையாக காயப்படுத்தி கொள்ளுதல்

உங்களை நீங்களே கடுமையாக காயப்படுத்திக் கொண்டிருந்தாலோ அல்லது அவ்வாறு செய்ய இருந்தாலோ, ஆம்புலன்ஸிற்காக 999ஐ அழைக்கவும் அல்லது நேராக A&E-க்கு செல்லவும். நீங்கள் தற்கொலை செய்து கொள்ள நினைத்தால், 116 123 என்ற எண்ணில் சமாரியர்களிடம் (நல்லதை செய்பவர்கள்) பேசுங்கள்.

# உடல்நலப் பராமரிப்பிற்கான உங்கள் உரிமைகள்: புலம்பெயர்ந்தோருக்கான வழிகாட்டி

## GP (பொது மருத்துவர்) இடம் பதிவு செய்ய அனைவருக்கும் உரிமை உண்டு

**உங்களுக்கு முகவரி, குடிவரவு நிலை, அடையாள அட்டை அல்லது NHS எண் போன்ற எந்த ஆதாரமும் தேவையில்லை.**





உங்கள் அருகிலுள்ள பொது மருத்துவர் (GP) பிராக்டிஸை கண்டுபிடித்து ஆன்லைனில் பதிவு செய்யுங்கள்.
www.nhs.uk/nhs-services/gps/how-to-register-with-a-gp-surgery/

ஒரு பொது மருத்துவரிடம் (GP) பதிவு செய்வதில் உங்களுக்கு சிரமம் இருந்தால், நீங்கள்:

• பொது மருத்துவர் அணுகல் அட்டையைப் பதிவிறக்கி, பொது மருத்துவரின் வரவேற்பாளரிடம் இதைக் காட்டலாம்
www.doctorsoftheworld.org.uk/gp-access-cards/

• உதவிக்கு NHS இங்கிலாந்தை (0300 311 22 33)இல் அல்லது உலக மருத்துவர்களை (0808 1647 686)இல் அழைக்கலாம்














## இந்த உடல்நல சேவைகள் அனைவருக்கும் இலவசம்

- பொது மருத்துவர் (GP)ஆலோசனை மற்றும் சிகிச்சை
- NHS 111 தொலைபேசி ஆலோசனையின் ஒரு பகுதியாக வழங்கப்படும் சேவைகள்
- A&E துறை, வாக்-இன் சென்டர், சிறு காயங்கள் பிரிவு அல்லது நெருக்கடிநிலை சிகிச்சை மையம் ஆகியவற்றில் வழங்கப்படும் விபத்து மற்றும் நெருக்கடிநிலை சேவைகள்
- சில தொற்று மற்றும் பால்வினை நோய்களைக் கண்டறிதல் மற்றும் சிகிச்சை செய்தல்
- கோவிட்-19 பரிசோதனை, கண்டறிதல், சிகிச்சை மற்றும் தடுப்பூசி ஆகிய NHS சேவைகள் வழங்கப்படுகின்றன
- குடும்பக் கட்டுப்பாடு சேவைகள் (கருத்தடை)
- சித்திரவதை, பெண் பிறப்புறுப்பு சிதைவு, குடும்ப வன்முறை அல்லது பாலியல் வன்முறை ஆகியவற்றால் ஏற்படும் உடல் அல்லது மன நோய் நிலைக்கு சிகிச்சை











## சிறப்பு உடல்நல சேவைகளை இலவசமாக பெறுபவர்கள்:

**·அகதிகள்**
**·புகலிடம் கோருவோர்கள்**
**·நவீன அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படுபவர்கள்**
**·சார்ந்து வாழ்பவர்கள்**

புகலிடத்திற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட பிறகும் மக்கள் இலவச NHS சேவைகளை அணுகலாம். இலவச உடல்நலப் பராமரிப்புக்கு நீங்கள் தகுதியுள்ளவரா என்பதைச் சரிபார்க்கவும்.
www.gov.uk/guidance/nhs-entitlements-migrant-health-guide

பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள், பல் மற்றும் கண் பராமரிப்பு பொதுவாக இங்கிலாந்தில் இலவசம் அல்ல, ஆனால் இந்த உடல்நலச் செலவுகளுக்காக முழு உதவியையும் பெற உள்துறை அலுவலகத்தின் நிதியுதவி பெற்று வாழும் புகலிடம் கோருவோர்களுக்கு HC2 சான்றிதழ் வழங்கப்படும். இந்த ஆதரவிற்காக யார் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம், எப்படி விண்ணப்பிப்பது என்பது குறித்த கூடுதல் ஆலோசனையைப் பார்க்கவும்.
www.gov.uk/guidance/nhs-entitlements-migrant-health-guide

UK Health Security Agency

கூட்டாண்மை உதவி

MAYOR OF LONDON

NHS

March 2022